www.ecourtsindia.com

DEPOSITION OF WITNESS Crl. Misc.39

(Chapter XXIII Code of Criminal Procedure)

*****

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
ADDITIONAL MAHILA COURT, MADURAI

| | | |
|---|---|---|
| Calendar | : | C.C.No.63/14 |
| Deposition of Witness for | : | PW.1 |
| Name | : | Manickavalli |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 22nd day of January 2021.

**முதல் விசாரணை தொடர்ச்சி**

அதன்பிறகு 3 மாதம் வாழும்போது அப்பப்போ சண்டை போடுவார். இழிவான வார்த்தைகள் பேசுவார். வரதட்சணை கேட்டு கொடுமைபடுத்துவார். வீட்டு வாடகைக்கான அட்வான்ஸ், Etios Car மற்றும் வீட்டுக்கான பொருட்கள் அனைத்தையும் எனது தகப்பனார் தான் கொடுத்தார். அதன்பிறகு நடுநடுவே இழிவாக பேசிக்கொண்டிருந்தார். உறவினரில் விசேச விழாவிற்கு பொள்ளாச்சியில் ஒரு பங்ஷன் நடப்பதாக இருந்தது. அங்கு வந்து என்னை அழைத்துக்கொள்வதாக சுஜய் கார்த்திக் சொன்னார். ஆனால் பொள்ளாச்சிக்கு போனபோது உங்கள் மகளுடன் வாழமுடியாது என்று சொல்லி அனுப்பிவிட்டார்.தீபாவளிக்காவது வருவார் என்று எதிர்பாாத்தோம் ஆனால் வரவில்லை. கடைசியில் 6.1.2013ம் தேதி கணவர் அவருடைய தம்பி, அவரது மனைவி, அவரது ் அம்மா ஆக 4 பேரும் என் வீட்டிற்கு வந்து வாழமுடியாது என்றும், 150 பவுன் நகையை திருப்பிக்கொடுக்கமுடியாது என்றும் கெட்டகெட்ட வார்த்தைகளால் திட்டினார்கள். மீறி கேட்டால் கொன்றுவிடுவோம் என்று மிரட்டினார்கள். நான் அழுதுகொண்டு ரூமிற்குள் இருந்தேன். என் அம்மா அப்பா பேசிக்கொண்டிருந்தார்கள். எவ்வளவோ முறை பேசிப்பார்த்தும் எதிரிகள் ் வாழ வரவில்லை என்பதால் சட்டரீதியாக நடவடிக்கை எடுத்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரை போலிசில் கொடுத்தேன். போலிசார் என்னை விசாரித்தனர். விசாரணையிலும் நான் அதையே சொன்னேன்.

**எதிரிகள் தரப்பில் கு.வி இல்லை**

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNMD070027652014-orderno-2.pdf

DEPOSITION OF WITNESS   Crl. Misc.39

(Chapter XXIII Code of Criminal Procedure)

*****

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
ADDITIONAL MAHILA COURT, MADURAI

| | | |
|---|---|---|
| Calendar | : | C.C.No.63/14 |
| Deposition of Witness for | : | PW.2 |
| Name | : | Arumugam |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 22nd day of January 2021.

**முதல் விசாரணை**

நான் தற்போது மதுரை வேல்முருகன் நகரில் குடியிருந்து வருகிறேன். நான் பல்வேறு தொழில் செய்து வருகிறேன். அசா.1 எனது மகள். 1ம் எதிரி எனது மருமகன்2ம் எதிரி எனது மகளின் மாமியார். 3ம்எதிரி 1ம் எதிரியின் சகோதரர். 4ம் எதிரி 3ம் எதிரியின் ் மனைவி. 21.3.12ம் தேதி அ.சா.1க்கும் 1ம் எதிரிக்கும் திருப்பதியில் வைத்து திருமணம் நடந்தது. திருமணத்தின்போது அ.சா.1க்கு 150 பவுனும் வெள்ளி சாமான்கள் ரூ.4,5 லட்சம் மதிப்புள்ளவை கொடுத்திருந்தேன். அதன்பிறக திருமணம் முடிந்தவுடன் சென்னையில் உள்ள எங்கள் வீட்டிற்கு சென்றுவிட்டோம். அங்கு அவர்களுக்கு சாந்தி முகூர்த்தம் நடந்தது. மறுநாள் சுஜய் கார்த்திக் என்னிடம் வந்து நான் பெங்களூரில் வேலை பார்ப்பதால் வீடு பிடிக்கவேண்டும் என்று சொல்லி ரூ.2லட்சம் கேட்டார். நான் ஒன்றரை லட்சத்தை ரொக்கமாக அவரிடம் கொடுத்தேன். பெங்களூரில வீடு பிடித்துவிட்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு சென்னையில் இருந்து மறுவீட்டிற்காக நேராக பொள்ளாச்சி சென்றுவிட்டனர். பொள்ளாச்சியில் 2 நாட்கள் தங்கியிருந்தார்கள். அதன்பிறகு 1ம் எதிரி ம்ட்டும் பெங்களூர் சென்று வீடு பிடித்து விட்டு வந்தார். வீட்டிற்கு தேவையான கட்டில், சாமான்கள், பாத்திரம், டி.வி. மிக்சி, கிரைண்டர் எல்லாம் வாங்கிக்கொடுத்தேன். அதன்பிறகு கார் வாங்கவேண்டும் என்று கேட்டார். காருக்கு முதலில் என் மகள் பெயரில் ரூ.50 ஆயிரம் கட்டி புக்கிங் செய்தேன். கார் வருவதற்கு தாமதம் ஆனதால் அவர் திரும்ப வேலை க்கு செல்லவேண்டும் என்றும் பெண்ணை கூப்பிட்டு சினிமாவிற்கும் உறவுக்காரர்கள் வீட்டிற்கும் செல்லவேண்டும் என்று சொன்னதால் Toyoto Etios Car வேண்டும் என்று போனில் கம்பல் பண்ணினார். என் மகளிடமும் சொன்னார். நான் எனது எச்.டி.எப்.சி. வங்கி கணக்கில்

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNMD070027652014-orderno-2.pdf

இருந்து ரூ.5 லட்சம் 5 லட்சமாக 2 தவணையாக மொத்தம் பத்து லட்சம் அவருக்கு அனுப்பிவைத்தேன். ஏற்கனவே ரூ.50 ஆயிரத்திற்கு கார் புக் செய்திருந்த புக்கிங்கை கேன்சல் செய்து அந்த பணத்தை அவரே வைத்துக்கொண்டார். அதன்பின்பு அவர் பொள்ளாச்சி கோட்டூர் மலையான்டிபட்டினத்தில் சொந்தமாக வீடு வேண்டும் என்று சொல்லி ரூ.25 லட்சம ் மதிப்புள்ள வீடு வாங்கவேண்டும் என்று சொல்லி என்னிடம் பணம் கேட்டார். நான் அந்த பணத்தை கொடுக்கவில்லை. ஏனென்றால் வேலை பார்த்த பணத்தை குடும்பத்திற்கு செலவு செய்யாமல் இருந்தார். நான் தான் 2,3 மாதங்களுக்கு செலவிற்கு பணம் மற்றும் வீட்டு வாடகை கொடுத்தேன். அதற்கு முன் திருமணம் பேசி முடித்த முகூர்த்த புடவை எடுக்கிறபோது மகாலட்சமி மற்றும் சுஜய் கார்ததிக்கிடம் ரூ.9 லட்சம் ரொக்கமாக திருமலைசாமி செட்டியார், பாலசுப்ரமணியம் ஆகியோர் முன்னிலையில் சாட்சியாக வைத்து கொடுத்தேன். திருமணம் பேசும்போது இதையெல்லாம் என்னிடம் சொல்லவில்லை. அதற்கு பிறகு என்னை வற்புறுத்தி பெற்றுக்கொண்டனர். திருப்பதிக்கு அவர்கள் உறவுக்காரர்களுடன் ரயிலில் வருவதற்கே நான் ஒன்றரை லட்சம் கொடுத்தேன். தீபாவளிக்கு அழைப்பதற்கு அவருக்கு ஒன்பது கிராம் நவரத்தின மோதிரம் ஜோய் ஆலுக்காஸ் மதுரையில் ் வாங்கிக்கொடுத்தேன். திருமணதிற்கு முதல் நாள் இரவு சாமி கும்பிடும்போது மாப்பிள்ளை அழைப்பின்போது 7 பவுன் கைச்செயின் போட்டேன். அதன்பிறகு தீபாவளிக்கு போய் மாப்பிள்ளையை அழைக்கும்போது பொள்ளாச்சியில் பங்ஷன் இருப்பதாகவும், அதற்கு வரும்போது அசா.1ஐ அழைத்து கொண்டு வீட்டுக்குவருகிறேன் என்று சொன்னார். அது மாப்பிள்ளையின் தாய்மாமா மகனின் நிச்சய நிகழ்ச்சி ஆகும். அந்த நிகழ்ச்சியில் நீங்க பெண்ணை அழைத்து செல்லுங்கள் என்றும், எனக்கு வேறு இடத்தில் அதிகமான சம்பளத்தில் வேலை பேசியிருப்பதாக சொன்னார். அதனால் அந்த வேலையில் சேர்ந்துவிட்டு மதுரை வருவதாக சொன்னார். ஆனால் தீபாவளிக்கு வரவில்லை. அன்று இரவு போன் செய்துகொண்டே இருந்தேன். அவர் போனை எடுக்கவில்லை. தீபாவளி முடிந்து 2,3 நாட்கள் கழித்து போனை எடுத்தார். எனக்கு பெங்களூரில் வேலை பார்க்க இஷ்டம் இல்லை என்றும், பொள்ளாச்சிக்கு பக்கத்தில் உள்ள கோட்டூர்மலையாண்டிபுரத்தில் தான் இருப்பதாகவும் சொன்னார். அதனால் அங்கு வீடு இருந்தால் தான் நான் வாழமுடியும் என்றும் சொன்னார். நான் கொஞ்ச நாள் பதில் சொல்லாமல் இருந்தேன். அப்போது பொள்ளாச்சியில் இருந்து நீதிமன்றத்தில் இருந்து விவாகரத்து கேட்டு எனது மகளுக்கு நோட்டீஸ் வந்தது. நான் பொள்ளாச்சியில் போய் நானும் எனது மகளும் நீதிமன்றத்தில் ் ஆஜராகிவிட்டு மதுரை வந்து சேர்ந்து வாழ வேண்டும் என்று சொல்லி குடும்ப நல நீதிமன்றத்தில் வழக்கு போட்டோம். நீதிமன்றத்தில் அவரும் அவரது அம்மாவும் சேர்ந்து வாழ்வதாக நீதிபதி முன்பாக சொன்னார்கள். ஆனால் பொள்ளாச்சி நீதிமன்றத்தில் என் மகளுக்கு மனநலம் சரியில்லை என்றும், பைத்தியம் என்றும் சொல்லி வழக்கு தாக்கல் செய்திருந்தார்கள். ஆனால் இங்கு வந்து பெண் நன்றாக உள்ளார் என்று சொல்லியும், சேர்ந்து வாழ்கிறோம் என்று சொல்லி வழக்கை வாபஸ் பெறச்சொன்னார்கள். குடும்ப நல

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNMD070027652014-orderno-2.pdf

நீதிபதி அவர்கள் பொள்ளாச்சி நீதிமன்றத்தில் பைத்தியம் என்று சொல்லியும் சேர்ந்து வாழமாட்டேன் என்று சொல்லியும் வழக்கு போட்டுவிட்டு இங்கு வந்து பெண் நன்றாக இருக்கிறார், சேர்ந்து வாழ்கிறேன் என்று சொல்கிறீர்களே என்று கேட்டார். வாங்கிய பணத்தையெல்லாம் என்ன செய்தீர்கள் என்று கேட்டார். அதற்கு அவர் நான் பணமே வாங்கவில்லை என்று சொன்னார். வங்கி பரிவர்த்தனை நடந்துள்ளதே இத்தனை சாட்சிகள் முன்னாடி கொடுத:துள்ளார்களே என்று கேட்டதற்கு அது கோர்ட்டுக்கும் வக்கீல்களுக்கும் செலவாகிவிட்டது ஏனறு அந்த நீதிமன்றத்திலேயே சொன்னார். நீதிபதி பணம் மற்றும் பொருட்கள்அனைத்தையும் உடனே திருப்பிக்கொடுக்கச்சொல்லி உத்தரவு பிறப்பித்தார். என்மகள் லண்டன் Medisix என்ற பல்கலைக்கழகத்தில் எம்.எஸ். முடித்துள்ளார். இரண்டு வருடம் தனியாக விடுதியில் தங்கியிருந்து படித்து: ஒரு இடத்தில் பகுதிநேர வேலை பார்த்தும் வந்தார். அசா.1ன் தனிப்பட்ட முயற்சியில் இடம் கிடைத்து தன்னந்தனியாக லண்டனில் படிக்க சென்றார். நான் திருமணத்திற்காக அவரை வாழ்க்கையில் செட்டில் செய்வதற்காக வரச்சொன்னேன். திருமணம் முடிந்து அவர்கள் நீதிமன்றததில் வழக்கு தாக்கல் செய்யவும் எனது மகளுக்கு திரும்ப ஒரு வாழ்க்கை மீட்டு கொடுக்கவேண்டும் என்று எனது மகளை அமெரிக்காவிற்கு Chalston (West Virgenia) வேலைக்கு அனுப்பினேன். அங்கு போய் ஓட்டுநர் உரிமத்திற்காக 3 டெஸ்ட் எழுதி ஓட்டுநர் உரிமம் பெற்றார். இதை நான் எதற்கு சொல்கிறேன் என்றால் எனது மகள் பைத்தியம் இல்லை என்பதற்காக தான் நான் சொல்கிறேன். இது சம்பந்தமாக என் மகள் புகார் அளித்தார். என்னிடம் காண்பிக்கப்படும் வங்கி பரிவர்த்தனை எச்.டி.எப்.சி வங்கி மற்றும் சிட்டி யூனியன் வங்கியில் பெற்று நான் காவல் நிலையததில் அளித்தேன். அந்த போட்டோவும் நான் காவல் நிலைய்தில் அளித்தேன். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர். விசாரணையில் இதையே சொன்னேன். எச்.டி.எப்.சி வங்கி பரிவர்த்தனை (2 பக்கம் ) **அ.சா.ஆ2** ஆகும். சிட்டியூனியன் வங்கி பரிவர்த்தனை (10 பக்கங்கள் ) **அ.சா.ஆ.3,** போட்டோ **அ.சா.ஆ,4** ஆகும்.

**எதிரிகள் தரப்பில் கு.வி**

எனது மகளுக்கும் எனது மருமகனுக்கும் இது இரண்டாவது திருமணம் என்றால் எனது மகளுக்கு தான் இது 2வது திருமணம். எதிரிகள் எந்த வழியில் எங்களுக்கு பழக்கம் என்றால் திருமலைசாமி செட்டியார், பாலசுப்ரமணியம் ஆகியோர் எங்கள் பங்காளிகள். அவர்களுடைய உறவினர் தான் 1ம் எதிரியின் தாயார் ஆவார். திருமலைசாமி செட்டியார், பாலசுப்ரமணியம் ஆகியோர் இந்த வழக்கில் சாட்சிகளா உள்ளார்கள் என்றால் சரிதான். 1ம் எதிரிக்கு சொந்த ஊர் என்பது பொள்ளாச்சி பக்கத்தில் உள்ள கோட்டூர்மாலையாண்டிபட்டினம் என்றால் சரிதான். பெங்களூரில் எனது மகளும் மருமகனும் எத்தனை நாட்கள் சேர்ந்து வாழ்ந்தார்கள் என்றால் திருமணம் ஆன தேதியில் இருந்து 6 மாதங்களுக்குள இருக்கும். மேற்படி 6 மாதங்களில் இடைப்பட்ட

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNMD070027652014-orderno-2.pdf

காலத்திற்குள் எங்கள் வீட்டிற்கும் கோட்டூர்மலையாண்டிபட்டினத்திற்கும் அவர்கள் எத்தனை முறை வந்துபோய் இருப்பார்கள். என்றால் மதுரைக்கு 2 முறையும் கோட்டூர்மலையாண்டிபட்டினத்திற்கு 3 முறையும் சென்றிருப்பார்கள். எனது மகள் அமெரிக்கா சென்று ஓட்டுநர் உரிமம் பெற்ற விபரத்தை நான் போலிசாரிடம் சொன்னேனா என்றால் அவர்கள் கேட்கவில்லை நான் சொல்லவில்லை. திருமணத்திற்கு பிறகு எத்தனை மாதங்களுக்கு பிறகு 1ம் எதிரி கார் கேட்டார் என்றால் 2ல் இருந்து 3 மாதங்களுக்குள்ளாக இருக்கும். மதுரைக்கு வரும்போது கேட்டாரா என்றால் இல்லை. போன் மூலமாக கேட்டார். திருமணத்தின்போது சீதனமாக கார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அவர்கள் கேட்கவில்லை. திருப்பதியில் வைத்து திருமணம் செய்யவேண்டும் என்பது யாருடைய விருப்பம் என்றால் எங்களது விருப்பம். இதனை நிச்சயதார்த்ததின் போது எங்களது விருப்பமாக நாங்கள் தெரிவித்தோமா என்றால் பெரியவர்கள் முன்னிலையில் பேசி முடிவெடுக்கப்பட்டது. தெய்வ சன்னிதானத்தில் வைத்து திருமணம் நடைபெறவேண்டும் என்பதால் திருப்பதியில் வைக்க முடிவு செய்யப்பட்டது. அதற்கு அவர்களும் ஒப்புக்கொண்டார்கள். அதாவது அவர்கள் மதுரை அல்லது பொள்ளாச்சியில் திருமணத்தை வைத்துக்கொள்ளலாம் என்று எதிரிகள் தரப்பில் சொன்னார்கள் என்றால் இல்லை. எங்கு வைத்து வேண்டுமானாலும் திருமணத்தை நடத்திக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். திருமணத்தின்போது பொள்ளாச்சி மலையாண்டிபட்டினத்தில் யாரெல்லாம் குடியிருந்தார்கள் என்றால் திருமணதிற்கு முன்பு 1ம் எதிரியும் அவரது அம்மாவும் குடியிருந்தார்க்ள. திருமணத்திற்கு பிறகு 1ம் எதிரியும் எனது மகளும் பெங்களூரிலும் அவரது அம்மா மலையாண்டிபட்டினத்திலும் இருந்தார்கள். பிரதீப் மற்றும் சங்கீதா எங்கு குடியிருந்தார்கள் என்றால் கோயம்புத்துாரில் குடியிருந்தார்கள். பிரதீப் மற்றும் சங்கீதா என்ன வேலை பார்க்கிறார்கள் என்றால் இப்போது என்ன வேலை பார்க்கிறார்கள் என்று தெரியாது. திருமணத்தின்போது மாடுலர் கிச்சன் அமைத்து கொடுக்கும் வேலை செய்து வந்தார்கள்.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.)**

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNMD070027652014-orderno-2.pdf

www.ecourtsindia.com